IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 212 /2012
Deposition of witness for PW2

Name : கேசவன்
Father's Name : கோவிந்தமந்திரி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22 day of February, 2022.

1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் எடப்பாளையம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எடப்பாளையத்தில் எனக்கு சொந்தமாக விவசாய நிலம் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தந்தை முருகேசன் எனது சின்னதாத்தா மகன் ஆவார். அவர் எனக்கு சித்தப்பா முறை வருவார். முருகேசன் சேவூர்கிராமத்தில் இறந்துபோனார். முருகேசனும், அவரது மனைவி சுலோச்சானவும் சேவூர்கிராமத்தில் வாடகை வீட்டில் இருந்தபோது இறந்துவிட்டார். அவரை சேவூர்கிராமத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார். சலோச்சனா யாதவர் இனத்தைச்சேர்ந்தவர். அவருக்கு சொந்த ஊர் சேவூர் ஆகும். முருகேசனுக்கு சொத்துக்கள் எடப்பாளையம் கிராமத்தில் உள்ளது என்றும், அது அவரது தாயார் முத்தியாலம்மாள் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான். மொத்த சொத்து 80 செண்ட் இருக்கும். முத்தியாலம்மாள் கிரையம் பெற்ற ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். முருகேசன் அவரது பேரன் 2ம் பிரதிவாதி மைனர் சூரியாவிற்கு எழுதிவைத்த உயில் ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மூர்த்தியும், 2ம் பிரதிவாதியும் இவ்வழக்கில் வாதிகள் மீது அ.வ.எண்.211/2012 என்ற வழக்கில் மூர்த்திக்கு ஆதரவாக வா.சா.3 ஆக 16.11.2015-ல் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். சுலோச்சனா மட்டுந்தான் முருகேசனின் மனைவி என்று இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக அ.வ.எண்.211/2012 சாட்சியம் அளித்துவிட்டு பின்னிட்டு

இவ்வழக்கின் வாதிகளுக்காக 16.11.2015ம் தேதியிட்ட பிரமாணவாக்குமூலத்திற்கு மாறாக பொய்சாட்சியம் அளிப்பதால் என்மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. சாட்சி தற்பொழுது தானாக அ.வ.எண்.211/2012 வழக்கில் சலோச்சனா மட்டுந்தான் இறந்துபோன முருகேசனின் மனைவி என சாட்சியம் அளிக்க சொன்னதால் நான் சாட்சியம் அளித்தேன் என்றும், தாவா நிலப்பிரச்சனை சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சி கூறுகிறார். 2015ம் வருடம் இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு சாதகமாக சாட்சி அளித்துவிட்டு மேற்படி சங்கதிகளை என் பிரமாணவாக்குமூலத்தில் மறைத்து சாட்சியத்திற்கு முரணாக பொய்சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் வாதி ராஜா குடியாத்தத்தில் வசித்து வருகிறார். அவரது சகோதரி மஞ்சுளா பெங்களூரில் வசித்து வருகிறார். அவரது கணவர் பெயர் தெரியாது. ராணியம்மாள் கர்நாடகாவில் இறந்துபோனார் அவர் எந்த தேதியில் இறந்தார் என்று எனக்கு தெரியாது. ராணியம்மாள் எந்த காலத்திலும் எடப்பாளையம் கிராமத்தில் வசித்து வரவில்லை என்றால் சரிதான். அவ்வப்போது எடப்பாளையம் வந்து செல்வார். நிரந்தரமாக வசித்து வரவில்லை. ராணியம்மாள் நாயக்கர் இனத்தைச்சேர்ந்தவர் என்றால் சரிதான். அவரது பூர்வீகம் கர்நாடகா மாநிலம். திடீரென முருகேசமந்திரி இறந்துபோனார் என்றால் சரிதான். முருகேச மந்திரி இந்நீர் பிரதிவாதிகளுக்கு எழுதிவைத்த உயில் ஆவணத்தை நான் பார்த்ததும் இல்லை சாட்சி கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் வாதி ராஜா சொன்னதின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட பிரமாணவாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால சரிதான். அதில் என்ன விவரம் எழுதியுள்ளது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். உயிலைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாமல் அதில் சாட்சி கையெபாப்பம் செய்யாதநிலையில் அதைப்பற்றி நான்

தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலம் நிராகரிக்கப்படதக்கது என்றால் சரிதான். அ.வ.எண்.211/2012ல் வா.சா.3ஆக வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துவிட்டு இந்தவழக்கில் அவர்களுக்கு எதிராக சாட்சியம் அளித்திருப்பதால் எனது சாட்சியம் நிராகரிக்கப்படத்தக்கது என்றால் சரிதான்.

R RAJAMAHESWAR Digitally signed by R RAJAMAHESWAR

DISTRICT MUNSIF

KATPADI.